உ

சிவமயம்





யாழ்ப்பாணம் மூளாயூர் வாசரும்

ஓய்வுபெற்ற அஞ்சலக அலுவலரும் ஆகிய

திரு ப. சிவப்பிரகாசம் அவர்களின்

அருந்தவப் புதல்வன்

# வீரவேங்கை நந்தகுமார்

( லெப்ரினன் குயிலன் )

அவர்களின்

வீரசொற்கப் பேறு குறித்த

# நினைவு மலர்

1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

வீரவேங்கை சி. நந்தகுமார் (லெப்ரினன் குயிலன்) அவர்களின் நீங்கா நினைவாக இவ் வண்ண மலரை வெளியிட்டு அஞ்சலி செய்கின்றோம். வீரசொற்கம் கண்ட மறவனின் ஆத்மா சாந்தி அடைவதாக,

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## கணபதி வணக்கம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்: காந்தாரம் — 4ஆம் திருமுறை

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி என்னும் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் தமர்காம்
அஞ்சுவ தியாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை.

### புராணம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

## சிவபிரான் துதி

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்: கொல்லி — 3ஆம் திருமுறை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கர்யிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்னதோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

## திருவிசைப்பா

பண்: பஞ்சமம்

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ
அன்பொடுந் தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம் அள்ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவள வாயவர் பணைமுலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங்கனைகை
கொண்ட சோனேச் சரத்தானே.

## திருப்பல்லாண்டு

பண்: பஞ்சமம்

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.

திருச்சிற்றம்பலம்

## உமாதேவியார் துதி

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணுதற் கன்னியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சாற்
காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.



## சுப்பிரமணியர் துதி

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தரிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே.

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி.

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகில் உழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை என்றற் கருள்வாயே
தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே
சிவன்அருளும் முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியும் அன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிகரபுத்திரர் துதி

காருறழ் வெய்ய களிற்றிடை யாளிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்.



நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

## திருமால் துதி

ஸ்ரீ

ஊனின் மேய ஆவிநீ உறக்கமோடுணர்ச்சி நீ
ஆனில் மேய ஐந்தும்நீ அவற்றுள்நின்ற தூய்மைநீ
வானி னோடு மண்ணும்நீ வளங்கடற் பயனும்நீ
யானுநீ யதன்றியெம் பிரானும்நீ இராமனே. (845)

குலம்தரும், செல்வந் தந்திடும், அடியார் படுந்துயர் ஆயினவெல்லாம்
நிலந்தரம் செய்யும், நீள்விசும்பருளும், அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும், மற்றும் தந்திடும், பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லைநான் கண்டுகொண்டேன் நாராயணா
[ என்னும்நாமம். (956)

ஸ்ரீ

## வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# யாத்திரைப் பத்து

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய் உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய் ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான்
[ கழல்புகவே (1)

புகவே வேண்டா புலன்களில் நீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துன்புகுந்து நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத் தளரா திருப்பார் தாந்தாமே. (2)

தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார் என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே
[ குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன் ஆள்வான்
[பொன்னடிக்கே. (3)

அடியார் ஆனீர் எல்லீரும் அகலவிடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன் பூவார் கழற்கே புகவிடுமே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகஓர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ் பெருஞ்சாத்தோ டுடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்கன் ஆள்வான்
[ புகழ்களையே. (5)

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று நெஞ்சம் உருகி நிற்போமே. (6)

நிற்பார் நிற்கநில் லாவுலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற் கரியன் பெருமானே. (7)

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னை நீர் அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம் திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே. (8)

சேரக் கருதிச் சி னையைத் திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற் கிடந்து புரளாதே. (9)

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின் சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே அந்தோ! அந்தோ! அந்தோவே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## வீரச்சொர்க்கம் அடைந்த

# செல்வன் சிவப்பிரகாசம் நந்தகுமார் (லெப். குயிலன்) அவர்களின்

# வரலாறு

ஈழத்தின் கண்ணே மகுடமென விளங்கும் யாழ்நகரின் மேற்கே மூளாய் என்னும் பழம்பெரும் பதியொன்றுண்டு. மூர்த்தி, தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்காய் அமைந்து வயலும் வயல்சார்ந்த மருதமும் மருவிய அப்பதியதனில் சித்திவிநாயகர் முத்துக்குமாரசாமி அரிகரபுத்திரனார் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மூளாய் பதிதனில் சைவ உயர்குலத்து ஸ்ரீமான் கதிரவேலு தெய்வானைப்பிள்ளை அவர்களின் புத்திரனாக வந்துதித்தார் பழனி அவர்கள். இவர் இக்கிராமத்திற்கு ஓர் தலைவனாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். சைவசமயப் பணிகளில் ஆர்வம் உடையவராகவும் மூளாய் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் முத்துக்குமாரசாமிப் பெருமான் ஆலய தொண்டனாக ஈடுபட்டு அங்கு ஆற்றவேண்டிய பணிகள் அனைத்தையும் கண்காணித்து வந்தார். இவ்வேளை வைத்திலிங்கம் முத்துப்பிள்ளை அவர்களின் மகள் செல்லாச்சி என்பவர் நல்ல மனையாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்களின் இல்லற வாழ்க்கையில் தலைப்புதல்வனாக சிவப்பிரகாசம் என்னும் மகன் தோன்றினார். பின்னர் இராஜேஸ்வரி, பரமேஸ்வரி என்னும் பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். சிவப்பிரகாசம் அவர்கள் தந்தை எவ்வழியோ மகனும் அவ்வழி என்பதற்கு அமைய ஆலயத் தொண்டனாகவும் பொதுப் பணிகளில் ஈடுபாடுடையவராகவும் தந்தையாரைப் பின்பற்றி ஆலயத் தொண்டே அளப்பரிய தொண்டுஎன மனதில்கொண்டு பணியாற்றி வருகின்றார். இவர் சுளிபுரம் அஞ்சல் அலுவலகத்தில் தபால் உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்வேளை பொன்னாலையெனும் பொற்பதியதனில் வாழ்ந்த சின்னத்தம்பி பொன்னாச்சிப்பிள்ளை அவர்களின் மகள் ஜானகி என்பவர் நல்ல மனையாளாகக் கிடைக்கப்பெற்று இவர்களின் இல்லறமாகிய நல்லற வாழ்வதனில் ஜெந்திரகுமார், ஜெயராணி, பாலகுமார், பத்மராணி, இன்பராணி, நந்தகுமார், விக்னகுமார், செல்வராணி இவர்களைப் புத்திரர்களாகப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் சி. நந்தகுமார் ஆறாவது புதல்வனாக 1973ம் ஆண்டு அன்னையால் அரவணைக்கப்பட்டார். இவரின் நாமங்கள் பல கண்ணன் ஆலய தேர் உற்சவத்தின்போது மகா மண்டபத்தில் அர்ச்சனை செய்யும்வேளை தந்தையாரால் இடப்பட்ட முதற்பெயர் நந்தகுமார் என்னும் நாமம். இவ்வேளை இவர் அன்னையின் கருப்பையில் அவதரித்து நான்கு மாதங்கள் அன்னையால் அரவணைக்கப்பட்டபின் பேரனால் இடப்பட்ட நாமம் சிற்றசேனன் எனவும் பேத்தியினால் இடப்பட்ட நாமம் வெள்ளைத்தம்பி வவா என்ற நாமங்கள் சூட்டப்பட்டு நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து பள்ளிப் பருவத்தை அடைந்து, யாழ். மூளாய் அமரிக்கன் மிஷன் பாடசாலையில் கல்வி கற்க ஆரம்பித்தார். அங்கு ஆசிரியையாகக் கல்வி கற்பித்த பெரிய தந்தையாரின் மகள் செல்வி முருகேசு முகுந்தாதேவி அவர்கள் இவரைப் பெற்றோரின் அனுமதியோடு தம் வீட்டிற்கு கூட்டிச்சென்று தாமே அவரைத் தம்மோடு வைத்து கல்விக்கு உதவியாக வழிகாட்டி வந்தபோது உயர் கல்விக்காக யாழ் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சென்று கல்விபயின்று கல்வியில் வல்லவனாகத் திகழ்ந்தார். செல்வி முருகேசு முகுந்தாதேவி திருமணமாகி அராலியூருக்குச் சென்றபோது இவரையும் தம்மோடு அராலிக்கே கூட்டிச்சென்றார். அங்கு நந்தகுமார் அவர்கள் அக்காவுக்குத் துணையாக இருந்து தமது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். இவரை உயர்நிலைக்கு உயர்த்த வேண்டுமென விரும்பிய தந்தையார் யாழ் வட்டு இந்துக் கல்லூரியில் உயர்கல்விக்காக இணைத்துக்கொண்டார்.

அங்கு கல்வி கற்றுக்கொண்டிருக்கும் வேளை விடுதலை உணர்வு அவரது உள்ளத்தில் தோன்றியது. 1989ம் ஆண்டு மார்கழி மாதம் 9ம் திகதியன்று இவர் தனது பெற்றோர், உடன்பிறப்புக்கள், மாமிமார், மாமன்மார், பெரியப்பா குடும்பத்தினர் பிள்ளைகள் இவர்களை விட்டுப்பிரிந்து தாயக மண்ணை மீட்கவேண்டும்என்ற பேரவாவினால் யாழ் மண்ணில் இருந்து மணலாறு மண்ணிற்குச் சென்று தமிழீழத் தலைவரின் பேரணியில் இணைந்துகொண்டார். அப்போது தலைவரினால் குயிலன் என்றபெயர் சூட்டப்பட்டது. நந்தகுமார் அவர்கள் குயிலனாக மாறி பயிற்சிபெற ஆரம்பித்தார். அங்கு பயிற்சியில் வல்லவனாகத் திகழ்ந்து ஏழாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சிமுடித்தார் முல்லைத்தீவில் இலங்கை இராணுவ முகாம் மீதான தாக்குதல் காத்துக்கிடந்தது. இத்தாக்குதலின் போது வெற்றிகரமாகத் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கும்போது குயிலனது இடது கரத்தின் விரல்கள் இழக்க நேர்ந்தது. பின்னர் யாழ் வந்து சிகிச்சைபெற்று மீண்டும் மணலாறு மாவட்டத்திற்கே சென்றார். மீண்டும் தாக்குதல்களில் வல்லவனாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் வேளை மணலாறு மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்டிமலை இராணுவமுகாம் மீதான தாக்குதல் ஆரம்பிக்க இருந்தது. கரத்தின் விரல் இழந்தபோதும் மனம் சலிப்படையாமல் மன வலிமையோடு மண்ணை மீட்கவேண்டும் என்ற மீளாத அவாவினால் போர்க்களம் விடைந்தான் குயிலன். தன் பேரணியினோடு அங்கு தம்மை முற்று முழுதாக ஒப்படைத்து குயிலன் என்ற பெயரினையும் லெப்டினன் என்ற சிறப்பினையும் தமக்கு அணிகலமாக்கி அளவுமிகு வீரதீர சாதனைகளையே நிலைநாட்டி கடந்த 25-07-1993 அன்று மணலாற்றுப் பிரதேச இதயபூமி மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பில் தம்மை முற்று முழுதாக ஒப்படைத்து பெருமதிப்பைப் பெற்று சண்டைக்காரன் குயிலன் என்ற பெயரோடு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். இவரின் இழப்பு குடும்பத்தார்க்கு பேரிழப்பாகிவிட்டது.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மாமறவன் சி. நந்தகுமார்
# ( லெப்ரினன் குயிலன் )
அவர்கள்

# மறைவு குறித்த மன்னைக் காஞ்சி

( யாழ் நாட்டு மூதூர் மூளாய் )

உலகெலாம் பரவும் உயர்தனிச் சிவநெறி
அலகிலாப் புகழின் அருந்தமிழ் என்னா
இருதனி விழிபயில் ஏந்திழை நல்லாள்
யாழக மகளென யாவரும் புகல்வர்;
யாழக மங்கைக் கெழில்தரு பதிகளுள்
சேற்றுவய லாங்கண் அலவன் திரிதரு
மேற்றிசை மேவி மிக்குயர் மூதூர்
மூர்த்திதலந் தீர்த்தம் முறைமையின் அமைதலின்
ஏவரும் ஏத்தும் இயல்பின் மிக்கது
மூளாய் என்றே மொழிகுவார் சான்றோர்
( பழநிப் பெயர்கொள் பண்ணவ னார்க்குச்
சிவப்பிரகாசராதி திருமகார் தோன்றினார் )
அத் திருப்பதியுள் ஆதிநாள் அதனின்
கதிரவேல் நம்பி காதன் மிகீஇ
தெய்வ யானைத் தெரிவையை மணந்து
செய்தவப் பேறெனச் செகதலந் தன்னில்
பழநிப் பெயர்கொள் பண்ணவன் போந்தனன்
அன்னவன் றானும் ஆன்றோர் வழியில்
தன்னலம் விழையான் பிறர்நலம் பேணி
வல்லநற் றலைவனாய் வதிதரு காலைச்
செல்லாச்சி என்னும் திருவுடன் இணைந்தே
அன்பும் அருளும் அறமும் பேணி
இல்லறம் தன்னை இயற்றிடு காலைச்
சிவப்பிர காசரும், இராசேஸ் வரியும்,
பரமேஸ் வரியும் பாங்குடன் உதித்தனர்;
சிவப்பிர காசச் செல்வ னாரும்
உவப்புடன் வளர்ந்து உயர்கலை தெரிந்து;
( சிவப்பிரகாசர் செந்தவத்தால் நன்மகார் எண்மர்
நானிலத் துதித்தனர் )
கல்வியும் ஒழுக்கமும் காத்து வைகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தன் அமலன் ஆருயிர் முதல்வன்
சித்திவி நாயகன் செவ்வேட் குமரன்
சந்ததம் அருளத் தகுபணி இயற்றி
அஞ்சல் திணைக்களத் தலுவல் பூண்டு
உத்தமன் என்ன உயர்ந்து நின்றனனே
அந்நாள் ஈண்றோர் அண்ணலாம் இவற்கு
பொன்மகள் கேள்வன் பொருகடல் துயில்வோன்
இன்னருள் நிலையி எழில்வழங் குலவும்
பொன்னாலை யூரிற் புகழ்மிகு நம்பி
சின்னத் தம்பியாம் செம்மல் ஈங்கண்
பொன்னாச்சி யுடனாய்ப் பொருந்திப் பயந்த
ஜானகிப் பெயர்கொள் மாமக ளாரை
மணவணி கண்டு மகிழ்ந்திடு போழ்தில்
ஜேந்திர குமாரே ஜெயராணி மற்றும்
பால குமாரே பத்ம ராணி
இன்ப ராணியே நந்த குமாரே
விக்கின குமாரே செல்வ ராணியாம்
மங்கல மகார்கள் வந்துதித் தனரே
(மண்ணினை மீட்க மறப்புலியாக நண்ணினான்
எங்கள் நந்தகுமாரே)
ஆங்கவர் தம்முள் ஆற்றன் மேவி
ஓங்கிடு நந்த குமாரும் வளர்ந்து
செல்லப் பெயர்கள் செப்பிட நின்று
வளரிள மதியென மருவிடு நாளில்
பெரிய தந்தையார் பெட்புடன் தரவரு
அரிய அக்காவாம் ஆசிரியை யார்
முகுந்தா தேவி முன்வந் துதவ
தொடக்கக் கல்வியை மூளாய் மிசனிலும்
திடமுடன் பின்னாள் சிறந்தவிக் ரோறியாக்
கல்லூரி தன்னில் கலைவிதம் பயின்றும்
வட்டு இந்துவில் வளர்கலை பயில்வுழி
ஈழத் தமிழரின் இன்னலுக் கிரங்கி
ஆண்ட தமிழினத் தடிமை அகற்ற
ஈண்டு சாத்விகநெறி இனியுத வாதெனச்
சுடுகலங் கொண்டு துட்டரை வீழ்த்தி
மண்ணினை மீட்டல் மாண்பென முன்னி
எண்ணிவெம் புலியாய் எழுந்திறு மாந்து
தேசியத் தலைவனாய்த் திகழ்பிர பாகரன்
அமைத்தபே ரணியில் அறாத்தியின் இணைந்து
குயிலன் எனக் குலவுபெயர் தாங்கி
அயர்வில னாகி ஆற்றன் மிகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியத்தகு மரபின் பயிற்சியும் முற்றிய
அடல்வலி வெம்புலி மறவன் மன்னே

( அடுகளம் புகுந்து அடையலர் தம்மைச்
சுடுகலம் தாங்கித் தொலைத்த நன்மறவன் )

முல்லை மண்ணை முழுவதும் வெளவிட
எண்ணிச் சீறிய சிங்களப் படையை
கண்ணிமைப் பொழுதில் கலங்கியே மாள
வியலகம் மருள விண்ணகம் வியப்ப
பண்ணிய பாய்புலி மள்ளன் மன்னே!
வெஞ்சம ரகத்தில் விரலினை இழந்துஞ்
துஞ்சல னாகித் துணிவுடன் மீண்டும்
அடுகளம் புக்கங் கமரது புரிந்தே
கொடியரைச் சாடிய கொற்றவன் மன்னே!
மணலாற் றமரில் மனங்குலை கிலனாய்
மாற்றலர் தாமும் மறிந்து குலைய
சீற்றமோ டட்ட திறலினன் மன்னே!
உதய சூரியனென உற்றெழு குயிலன்
இதயபூமி ஒன்றென இயம்பும்
கதமலி அமரில் கலந்தன னாகி

( மண்கிண்டி மலையில் வாகை சூடி
வீரசொற்கம் புகுந்தான் குயிலன் )

மாற்றலர் தாமும் மண்கிண்டி மலையில்
தோற்றே ஓடத் துணிவுடன் பொருது
அரணம் அனைத்தையும் அகற்றி நூறி
முரணுறு சுடுகலம் முற்றும் அள்ளி
வெற்றி வாகை விளைந்திடு நாளில்
புண்ணுமிழ் குருதி நெஞ்சகம் நனைப்ப
புன்புலால் யாக்கையைப் பெருக்கென வீசி
விண்ணவர் புகழ வேங்கைகள் ஏத்த
வீர சொற்கம் விரைந்தவன் மன்னே!
இருபான் அகவையுள் ஏவரும் பரவ

( வெம்புலி குயிலன் விரிபுகழ் தொழுவோம் )

வெம்புலி குயிலன் வீறுகொண் டெழுந்து
இம்பரில் இயற்றிய இறாஞ்செயல் பலவே
தன்னுறு யாக்கை பொன்றிய தெனினும்
பன்னும் புகழுடன் பாரின் மீமிசை
சிலையென நின்று திகழும் இனியே
பெற்றவர் உற்றவர் உறவினர் ஊரார்
கற்றவர் மற்றவர் காதலர் சான்றோர்
ஏவரும் இயைந்தே இவன்புகழ் பாடி
இதயங் குழைந்தே இருகை கூப்ப
பரவுதும் பரவுதும் பார்மிசை நன்கே.



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரை மாலை

## தந்தை உரைத்தது

எண்ணிலவாங் கற்பனைகள் இதயத்துட் கொண்டிருந்தேன்
கண்மணியே என்நந்தா கணத்தினிலே போகடித்தாய்
விண்ணவர்கள் விருந்தானாய் விழுதாயிக் காக்கவில்லை
எண்ணியெண்ணி ஏங்குகின்றேன் இளையோனே கேளாயோ.

## தாயுரைத்தது

திங்களொரு பத்துநாள் திருமகனே சுமந்து கொண்டேன்
இங்கினியென் துன்பமெலாம் ஏகிடுமென்றே இருந்தேன் யான்
பொங்கியெழு வெம்புலியே பொருக்கெனநீ போனதென்னே
சங்கைமிகு நந்தாவோ சாற்றாது போயினையே.

## உடன்பிறந்தோர் உரைத்தது

எப்பேறும் பெற்றிடலாம் இங்கொருதாய் வயிற்பிறக்கும்
அப்பேறு பெறற்கரிதால் ஆற்றகிலேம் ஆற்றகிலேம்
ஒப்பெவரும் இல்லாதாய் உரனுடைய வெம்புலியே
அப்பாநீ சொல்லாதே அகன்றதுதான் ஏதையா.

## சின்னமாமி உரைத்தது

சீறியெழு வெம்புலியே திருமருகா நந்தாவோ
ஆறமனம் இல்லையையா அரியசின்ன மாமியுனோம்
ஊறுபடா உன்னுடலை ஒருநொடியும் கண்டிலமே
கூறவினி வார்த்தையிலை குதித்தோடி வாராயோ.

## பெரியமாமி மாமா மைத்துனன் உரைத்தது

ஆருயிரே நந்தகுமார் அருமருகா இன்னமிர்தே
சீருடையில் எமதில்லம் சேர்வாய்நீ என்றிருந்தோம்
நேரெவரும் இல்லோனே நின்பிரிவு தாங்கரிதாக
ஆரொருவர் இங்கினித்தான் ஆறுதலே கூறிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மாமன் மாமி மைத்துனர் மைத்துனி உரைத்தது

### வேறு

மண்ணினைக் காக்கவேண்டி மறப்புலி ஆகிப் போந்தாய்
கண்ணினுண் மணியே அன்னாய் காவலனார் கருணை ஈதோ
எண்ணமும் சினதே நந்தா ஏங்கியே தவிக்க வைத்தாய்
தண்ணணி மிக்கோன் நீயே தகாதன செய்ய லாமோ.

## பெரியப்பா பெரியம்மா குடும்பத்தார் உரைத்தது

பேதுற வைத்தாய் அப்பா பெரியப்பா குடும்பத்தாரை
ஏதுநீ உரைத்த வெல்லாம் என்றினி உன்னைக் காண்போம்
பாதகர் உடன்மலைந்தாய் பற்பல வெற்றி கண்டாய்
வேதனை செய்து விட்டாய் விண்ணிருந் தெண்ணுவாயோ.

## முகுந்தாதேவி அக்கா உரைத்தது

அன்றுநீ வளர்ந்தே எங்கள் ஆவலைத் தீர்ப்பாய் என்ன
நன்றுமே கல்வி கற்க நானுறு துணையாய் நின்றேன்
சென்றனை மண்ணை மீட்கச் செறாவினில் வாகைசூடி
நின்றனை மறந்தாய் அக்கா நின்முகம் காண்பதென்றோ

## செல்வரத்தினம் குடும்பத்தினர் துரைராசா குடும்பத்தினர் ரகுநாதன் குடும்பத்தினர் உரைத்தது

திங்களின் முகமென எங்கள் முன்திகழ்ந்த நந்தாவே
திடீரென எம்மை விட்டுப்பிரியக் காரணம் யாதோ
அத்தான் அக்காவென அன்புமொழி பாடிய நந்தாவே
ஆறுதல் கூற எமக்கு இனியார் வருவாரோ நந்தகுமாரா.

## தாயாரின் சகோதரர் பிள்ளைகள் உரைத்தது

### வேறு

நந்தாநீ நகையரும்ப நம்மில்லம் வருவாயென
வந்திடுபேர் ஆசையுடன் வழிபார்த்து நின்றிருந்தோம்
கொந்தளவே வானகம்நீ கொடிதனிலே சென்றுவிட்டாய்
இந்தவகை செய்ததென்னே! இதுதகுமோ எந்துரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தப்பாமார் சித்திமார் உரைத்தது

விறல் மிகுத்த வேங்கையுநீ வெற்றிபல கண்டவன்நீ
திறவில்லார் போல்நாமும் தேங்கியழு கின்றோமே
கூறாமற் போனதென்னே குற்றமென்ன செய்துவிட்டோம்
ஆறமனம் உண்டோதான் அன்புமிகு நந்தாவோ

## உற்றார், உறவினர், நண்பர்கள், ஊர் மக்கள் உரைத்தது

உன்னூரின் நடுவண்நீ உயர்தருவாய் நிழல்தந்தாய்
எள்ளாதே ஏவரையும் இன்போட ணைத்திடுவாய்
உள்ளங்க ளித்திருந்தோம் ஒப்பில்லா வீரனென
கள்ளமிலாய் சொர்க்கம்நீ காதலித்த தேனையா?

## தேற்றம்

### வேறு

ஆத்துமன் அழிவற் றான்காண்; ஆடைதான் நைந்துவிட்டால்
நீத்துமே புதிது டுப்பார் நீடுநாம் கண்ட தன்றோ
கூத்தலோ உலக வாழ்வு கொள்வதேன் கவலை வீணே
ஏத்துவோம் இறைவன் றாளை எமக்கெது அதிகா ரந்தான்.




ஓம் சாந்தி சாந்தி சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெப்ரினன்ட் குயிலன் அவர்கள்
## ( செல்வன் சிவப்பிரகாசம் நந்தகுமார் )
### மூளாய் தெற்கு, சுளிபுரம்

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வனே
தரணியிலே வந்துதித்த வீரமைந்தனே
மூளாயிலிருந்து தமிழ் மானங்காக்க புறப்பட்ட
– நந்தகுமாரே!
குன்றா ஒளிதந்த குயிலன் சிட்டாய்ப் பறந்தவனே
வீட்டின்ப வாழ்வை வெறுத்து நாட்டினைக் காத்திடவே
வேட்டுக்கள் நெஞ்சைத் தொட்டு முத்தம் தந்திடவே
தங்கத் தமிழீழத்தின் தாகம் தணித்திடவே
வேங்கையாய் நீயும் மணலாற்றில் நின்று
வீரகாவியம் படைத்தனையோ!
வீரத்தோடு வேகமும்கொண்ட தீரன்நீயும் இன்று
எம்மைச் சோகத்தில்
ஆழ்த்திவிட்டு சென்றஇடம் எவ்விடமோ?
மண்ணிலே மரணம் ஒருநாள் வரும் மண்ணை
நேசித்த நந்தகுமார்!
மரணத்தைக் கண்டு பயப்படவில்லை மாறாக
குயிலன் என்ற பெயரினையும் லெப்டினன் என்ற
சிறப்பினையும் அணிகலமாக்கி – அந்த
மண்ணிற்கே வித்தானாய்
மண்மீதும் மக்கள்மீதும் கொண்ட பற்றுதலால்
இந்த மண்ணுக்கு உரமாகிப் போனாயே
தமிழ் தாயை விடுவிக்க தன்னுயிரை விட்டாயே
தவிக்கும் உன் தந்தை தாயையும் சகோதரங்களையும்
காணநீ மீண்டும் வரவேண்டும்
ஆறாது மாறாது வெம்பி அழுதாலும் தீராது என்றும்
உன்ஆத்மா சாந்தியடைய அரவணைப்போம் உனதன்பை
அதுவரை உன் அடி தொடர்வோம்.

காரைநகர்

இராமலிங்கம் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குயிலது குரல் ஏன் இழந்தது

எங்களின் வீட்டிலோர் தென்றல் எழுந்தது
எதிரிகள் படைக்கது புயலாகி நின்றது
வீட்டு முற்றத்தில் பூவொன்று பூத்தது
பூவது பகைவற்கு பூகம்பம் ஆனது
கண்கள் சிவந்தது கனவொன்று பறந்தது
சிங்கக் கொடியது சிதைந்து எரிந்தது
பொங்கு புலிப்படை போரொன்று தொடுத்தது
பொழுதினில் புலிக்கொடி எங்கும் நிமிர்ந்தது
சங்கு முழங்கிட பகைகள் அகன்றது
சங்கத் தமிழற்கோர் சரித்திரம் பிறந்தது
சிந்திய குருதியில் சேறு குழைந்தது
சிங்கள மண்ணிலோர் வெட்கம் வெடித்தது
மண்கிண்டி மலைமுகாம் தகர்ந்து அழிந்தது
மறத்தமிழ்க் கொடியங்கு எழுந்து அசைந்தது
விடியல் புலிக்காய் விரைந்து விடிந்தது
விடியுமுன் புலிபத்து காவியம் ஆனது
வெற்றிக் களிப்பில் ஈழம் குளித்தது
வேதனையோடு ஒரு சாதனை நிகழ்ந்தது
இதய பூமியில் தமிழ்ப்படை நடந்தது
இனிய தோழரைத் தோள்கள் சுமந்தது
புலரும் பொழுதில் புகழும் வந்தது
பூங்குயில் ஒன்றங்கு பூமேற் கிடந்தது
அணிகள் நடந்தது அதிர்கள் பிழந்தது
''குயிலன்'' என்றதோர் கூவலும் கேட்டது
உறவுகள் அழுதது உணர்வுகள் துடித்தது
''குயிலன்'' நாமம் குன்றென வளர்ந்தது
ஒன்று புரிந்தது உலகமும் வியந்தது
எங்களின் குயிலது ஈழவித்தென விழுந்தது!

இங்ஙனம்
உறவுகள் அழுதிட
உணர்வுகள் துடித்திடும்
**மருமக்கள் - பேரமக்கள்**
**மூளாய் - பொன்னாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர சுவர்க்கத்தின் — விண்மீன் ஒன்று நீ

மூளாய் மண் செய்திட்ட பெரிய தவம் தானோ – அன்று
மூளாய் மாந்தர்தான் செய்திட்ட தவம் அன்றோ
மகன் தந்தைக்கு ஆற்றிட்டான் பெரிய உதவிதான்
இவன் தந்தை என்னோற்றான் என்றுதான் வியக்கின்றார்

தோன்றிப் புகழோடு தோன்றோனும் அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று என்று புலம்பினாய்
தோன்றிய புகழை நீ துடிப்போடு தேடவா
தோன்றிய மண்ணின் துயரை நீ காக்கவா?
பாய்ந்து சென்றாய் பரதனே எம் நந்தா
பாயும் புலி வீரா பாசறை தான் தேடி

இரண்டு அட்சரம் நீ பெற்ற வீரத்தால்
கண்ணி வெடியகற்றி நீ கைவிரல்தான் இழந்திட்டாய்
கலங்கிய பெற்றோரை கனிவுடன் பார்த்து நீ
கருணையாய் மொழிந்திட்ட வார்த்தைகள் ஒலிக்கிறதே

கரத்தின் விரல்தான் இழந்தாலும் கலங்காத மனதுடனே
ஆயிரம் தலைகொண்ட ஆதிசேடன் போல்
அழியாத வீரத்தை கரம் ஒன்றில் தாங்கித்தான்
அன்பர்கள் புடைசூழ அணிவகுத்து நீ
மண்கிண்டி மலைதன்னை செங்குருதி நிலமாக்க
மலைபோல் முன் நடந்தாய் மாவீரன் நந்தா நீ

மண்கிண்டி மலையிலே மாற்றான் படைதன்னை
மண்கவ்வ வைத்து புரிந்திட்டீர் சாகசங்கள்
புல்லர் படையோடரசு புயலாய் கொந்தளிக்க
செய்வதறியாது திசைகெட்டு தான் தவிக்க
வீரம் பலசெய்து விண்ணுலகம் சென்றிட்டாய் – இல்லை
வீர சுவர்க்கம்தான் நீ வீறுடன் நடந்திட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணவர் மத்தியிலே வீர சுவர்க்கத்தில்
விண்மீனாய்த் தானொளிநம் மாவீரர் மத்தியிலே
வீரக் கொடிபிடிக்க வேங்கையே நீயும்தான்
வீறுடன் நடந்தாயோ வீரப்புலி மறவா

அப்பாச்சி என்று நீ அன்பாய் அழைத்திடுவாய்
மாமி மாமி என்று மயக்கித்தான் வந்திடுவாய்
மாமா தனைக் கண்டால் மந்திரம்போல் அடங்கிடுவாய்
மைத்துனர் எம்முடன் நீ மல்லுக்கு நின்றிடுவாய்
சித்தப்பா தனைக் கண்டால் சிரிப்பால் மயக்கிடுவாய்
சித்தி சித்தி என்று சிட்டாய்த்தான் வந்திடுவாய்
சின்னஞ் சிறு தம்பியரைத் தீண்டியழுவிப்பாய்
துடுக்குத் தனத்துடன் துரிதாட்டம் போடும் நீ
மீளாத் துயர்கொண்டு மின்னலாய் மறைந்ததேனோ!!!

உன் வீர சுவர்க்கத்தை கேள்வியுற்று கலங்கும்

**அப்பாச்சி (நல்லம்மா)**
**சித்தப்பாமார், மாமி, மாமா**
**சித்தி, மைத்துனர்கள், சகோதரிகள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குயிலன்' புலிகளின் குரல்களில் வாழ்கிறான்

மகவேட்கை தணிக்கவொரு மகனாகப் பிறந்தான்
மகிழ்வோடு ஒருவீட்டின் மலராக வளர்ந்தான்
தமிழோடு தன்மானம் கற்றிவன் தெளிந்தே
தமிழீழ விடுதலைப் புலியோடு இணைந்தான்!

சமூகத் தொண்டினளை தாயாகப் பெற்றான்
ஓர்சமயத் தொண்டினனை தந்தையாய் கொண்டான்
இமயத்தை எட்டுமோர் இலட்சிய வேட்கையால்
இணையிலா ஈழப்போர் கழங்களில் புகுந்தான்!

தென்மூளாய் மண்ணிலோர் தென்றலென எழுந்தான்
தேசத்தை மீட்கவே தாய்வீடு மறந்தான்
கைவிரல் இழந்தும்பின் களம்பல புகுந்து
கண்ணியத் தலைவனின் கருத்தினில் வளர்ந்தான்!

சோலைக்கு சோலை கூவும் குயிலானான்
கழத்துக்கு கழமிவன் கால்கள் பதித்தான்
உரிமைக்குக் கூவிடும் உன்னத குயிலாகி
"லெப்ரினன் குயிலனாய்" நந்தகுமார் ஆனான்!

மணலாற்று மண்ணிலோர் புயலானாய் வீசினான்
மண்கிண்டி மலையிலும் பகைகிண்டி வீசினான்
திசையெங்கும் சிவந்திட தேகம் ஈந்தொரு
தமிழீழப் போர்தனில் வித்தாகி வீழ்ந்தான்!

குயிலன் குன்றிலும் மேலாக உயர்ந்தான்
மக்களைக் காக்கவே மார்பினைக் கொடுத்தான்
புலிகளின் நெஞ்சிலும் பூங்குயில் வாழ்வதால்
குயிலன் புலிகளின் குரல்களில் வாழ்கிறான்!!!

இங்ஙனம்

**மூளாய் சித்திவிநாயகர் முத்துக்குமாரசாமி ஆலய**
**தேர் திருப்பணிச் சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அருமைப் புதல்வனாய் முகிழ்ந்த அருமை மொட்டு கருகி விட்டது. ஆருயிர் நந்தகுமார் அகன்று விட்டான். இழப்பினை அறிந்து ஆறுதல் கூறிப் பல்லாற்றானும், உதவிகள் புரிந்தோர், செய்திகள் அனுப்பியோர் அவனது அணியைச் சேர்ந்த அருமைத் தோழர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள், மூளாய் வர்த்தக சங்கத்தினர், மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினர், மூளாய் வாணிநிகேதன சன சமூக நிலையத்தினர், எமது ஊரார் மற்றும் அனைவர்க்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் முதலியவற்றில் பங்கு கொண்டோர் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

— குடும்பத்தினர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமொழி அச்சகம்
சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org